**Series RHB** **Code No. 10**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **19** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **19** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer script during this period.

# SUMMATIVE ASSESSMENT – II

# TAMIL

# தமிழ்

*நேரம் : 3 மணி* *மதிப்பெண்கள் : 80*

*Time : 3 hours* *Maximum Marks : 80*

## பகுதி அ

**1.** கீழ்வரும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக. *5*

பாரிவள்ளலின் மகளிர் இருவரும் அறிவும் அழகும் பெற்றவர்கள். மூவேந்தர்கள் அப்பெண்களை மணக்கத் தூது அனுப்பினர். பாரி மறுத்தார். மூவேந்தரும் சினந்து சீறினர். பாரியின் கோட்டையை முற்றுகையிட்டனர். முற்றுகை மூன்றுவாரங்கள்

நீண்டது. பாரியின் பறம்புமலைக் கோட்டை மக்கள் அவதிக்கு ஆளாயினர். கபிலர் பாரியின் சிறந்த நண்பர். அவர் போரைத் தவிர்க்க முயன்றார். பாரியிடம் இரவலராகச் சென்று பெண் கேட்டால் தருவான் என்றார். மூவேந்தர்களும் அவ்வாறே இரவலர்களாகச் சென்று வஞ்சகத்தால் பாரியின் உயிரையே பரிசாகக் கேட்டுக் கொன்றனர். பாரியை இழந்த நாடும் மக்களும் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடித்துக் கதறினர். கபிலர் பாரியின் பிரிவால் மனங்கலங்கினார். பறம்பு மலையிலிருந்து தென்பெண்ணை ஆற்றின் நடுவே வடக்குநோக்கி உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தார். நட்பிற்கிலக்கணமாக விளங்கிடுவோர்களில் பாரியும் கபிலரும் முதன்மையானவர்கள்.

(i) மூவேந்தர்கள் ஆசையென்ன ?

(அ) நாடினைக் கைக்கொள்வது

(ஆ) பாரிமகளிரை மணப்பது

(இ) பாரியின் செல்வங்களைக் கொள்ளை இடுவது

(ஈ) வீரம் காட்டுவது

(ii) முற்றுகை எத்தனை நாட்கள் நீடித்தது ?

(அ) மூன்று வாரங்கள்

(ஆ) பலநாட்கள்

(இ) மாதக்கணக்கில்

(ஈ) ஒருமாதம்

(iii) மூவேந்தர் பாரியை எவ்வாறு சந்தித்தனர் ?

(அ) பாரியை நண்பர்களாகச் சந்தித்தனர்

(ஆ) வஞ்சக எண்ணத்துடன்

(இ) இரவலர் வேடத்தில்

(ஈ) தனித்தனியே

(iv) பாரியை இழந்த மக்கள் எப்படித் துடித்தனர் ?

(அ) புண்பெற்றவர் போல

(ஆ) அனலிடைப்பட்ட மெழுகு போல்

(இ) அனலிடைப்பட்ட புழுக்கள்போல

(ஈ) அழுது புலம்பி

(v) கபிலர் வடக்கு நோக்கியிருந்தது எங்கே ?

(அ) பரம்பு மலையில்

(ஆ) பொதிகை மலையில்

(இ) தென்பெண்ணை ஆற்றின் நடுவே

(ஈ) குகையுள்ளே

**2.** கீழ்வரும் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட பல்வகை வினாக்களுக்கு ஏற்ற விடையை அறிந்து எழுதுக. *5*

பாண்டியநாட்டுப் பழம்பதிகளுள் ஒன்று திருக்குற்றாலம். குற்றால நாதர் திருக்கோயிலுக்கு வடதிசையில் சித்திரசபை என ஒன்றுள்ளது. இது ஓர் ஓவியக் கூடம். கூத்த பெருமானின் திருநடன சபைகள் ஐந்தாகும். அவை பொன், வெள்ளி, தாமிரம், இரத்தினம், சித்திரம் ஆகியவற்றால் ஆனவை என்பது புராண

வழக்கு. தில்லையில் திகழ்வது பொற்சபை. மதுரையில் விளங்குவது வெள்ளியம்பலம். திருநெல்வேலியில் விளங்குவது தாமிரசபை. பழையனூர் எனப்படும் திருவாலங்காட்டில் அமைந்தது இரத்தின சபை. திருக்குற்றாலத்தில் திகழ்வது சித்திரசபை எனக்கூறுவர். இச்சித்திரசபையில் நடராசப் பெருமான் ஆடிய கூத்தை உமையாள் கைத்தாளம் கொட்டி மகிழ்ந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. திருக்குற்றாலத்தின் சிறப்பைக் குற்றாலக் குறவஞ்சி முதலிய பதினான்கு நூல்கள் உலகுக்கு எடுத்துக் கூறுகின்றனவாம்.

(i) குற்றாலம் எப்பகுதியில் உள்ளது ?

(அ) சேரநாட்டில்

(ஆ) பாண்டிய நாட்டில்

(இ) சோழநாட்டில்

(ஈ) தொண்டைநாட்டில்

(ii) சித்திரசபை என்பது யாது ?

(அ) பலரும் அமரும் இடம்

(ஆ) சிற்பக்கூடம்

(இ) ஆடல் அரங்கம்

(ஈ) ஓவியக் கூடம்

(iii) கூத்த பெருமான் என்பது யாரைக் குறிக்கும் ?

(அ) திருமால்

(ஆ) பிரமன்

(இ) இந்திரன்

(ஈ) நடராசப் பெருமான்

(iv) குற்றாலத்தின் சிறப்பைக் கூறுவது

(அ) குற்றாலக் குறவஞ்சி

(ஆ) தேவாரம்

(இ) திருவாசகம்

(ஈ) பிரபந்தம்

(v) திருநெல்வேலியில் விளங்கும் சபை எது ?

(அ) பொற்சபை

(ஆ) வெள்ளியம்பலம்

(இ) இரத்தின சபை

(ஈ) தாமிர சபை

**3.** பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு ஏற்ற விடை தேர்ந்து எழுதுக. *5*

கடல் என்றும் வற்றாத நீர் நிலையாகும். பூமியின் தட்ப வெப்பநிலையை ஒழுங்கு படுத்துவது கடல்கள் தாம். கடலின் சராசரி ஆழம் 12480 அடிகள் என்று கடலியல் வல்லுநர் கணக்கிட்டுள்ளர். கடல் நிலத்தை விட மெதுவாக வெப்பமடையும். கடற்காற்று, நிலக்காற்று ஆகியவை பற்றிப் புவியியலில் விளக்கமாகப் படிக்கலாம். வணிக வளர்ச்சிக்கும் போக்குவரத்திற்கும் இன்றியமையாததாக விளங்கும் கடல் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைநிற்கிறது. கடலின் ஆழத்தில் முதல் 1200 அடி ஆழம் வரையில் வெப்பம் மிகவும் வேகமாகக் குறையும். 7200 அடி ஆழம் வரையில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். அதற்குக்

கீழே பெரும்பாலும் வெப்ப நிலையில் வேறுபாடு இருக்காது. கடலின் சராசரி வெப்பம் சுமார் 39° பாரன்ஹீட் ஆகும்.

(i) கடலின் பணி யாது ?

(அ) ஆழிப்பேரலை உருவாக்குவது

(ஆ) பூமியின் தட்பவெப்ப நிலையை ஒழுங்குபடுத்துவது

(இ) காற்றை உருவாக்குவது

(ஈ) ஆறுகளை ஏற்பது

(ii) கடலின் சராசரி ஆழம் எவ்வளவு ?

(அ) சுமார் 1200 அடிகள்

(ஆ) 12480 அடிகள்

(இ) 7200 அடிகள்

(ஈ) 10000 அடிகள்

(iii) வெப்பநிலை எத்தனை அடி ஆழத்தில் மாறுபடாமல் கடல் விளங்கும் ?

(அ) 5000 அடிக்குக் கீழ்

(ஆ) 7200 அடிக்குக் கீழ்

(இ) ஆயிரம் அடிக்குக் கீழ்

(ஈ) மாறுபடும்

(iv) கடலின் பயன் யாது ?

(அ) போக்குவரத்துக்கு உதவுதல்

(ஆ) நவரத்தினங்கள் தருதல்

(இ) அழித்தல்

(ஈ) காத்தல்

(v) கடல் நிலத்தை விட __________ வெப்பமடையும்.

(அ) மெதுவாக

(ஆ) விரைவாக

(இ) உடனே

(ஈ) அடிக்கடி

## பகுதி ஆ

4. நீ வாழும் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர நூலகத் துறை ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதுக. *6*

**அல்லது**

பாடநூல்களைப் படிப்பதோடு மற்ற அறிவு வளர்க்கும் நூல்களையும் படிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள உன் தம்பி/தங்கைக்கு (அயலூரில் வாழ்பவர்) கடிதம் எழுது.

உனது முகவரி ஆடலரசன்/ஆடலரசி, எண் 30, தென்றல் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 40 எனக் கொள்க.

5. ஏதேனும் ஒருபகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. *6*

(அ) தொழில் வளர்ச்சி — நகரினில் மட்டுமே தொழிற் சாலைகள் — கிராமப்பகுதியில் தொழிற்சாலைகள் அமைத்தல் — கிராம மக்கள் வேலை வாய்ப்புடன் அடிப்படை வசதி பெறுதல் — சீரான பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்தல்.

(ஆ) போக்குவரத்து வாகனங்கள் பெருக்கம் — சாலைகள் அமைப்பு, சாலை விதிகள் கடைப்பிடித்தல் — வேகம் விவேகமல்ல — தலைக்கவசம் தற்காப்பு சாதனம் — விபத்துக்கள் இல்லாத போக்குவரவுக்கு உறுதி கொள்ளல்.

(இ) தகவல் தொடர்புச் சாதனங்கள் — நன்மைகளும் தீமைகளும் — கட்டுப்பாடும், கவனச்சிதைவுகளும் — நல்லதற்கே தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தல் — வளமான வாழ்வு வாழ்தல்.

6. நீ வாழும் பகுதியில் நடைபெற்ற குடியரசு தின விழாப் பற்றி அறிக்கை எழுதுக.

**அல்லது**

நீ வாழும் பகுதியில் நடைபெற்ற மழைநீர் சேமிப்பு முகாம் பற்றி அறிக்கை எழுதுக.

## பகுதி இ

7. சான்று தருக (**மூன்றுமட்டும்**)

(i) புளிமா

(அ) களிறு

(ஆ) களிப்புடன்

(இ) வினா

(ஈ) தேடு

(ii) கூவிளங்காய்

(அ) கண்மணி

(ஆ) களர் நிலத்தில்

(இ) கார்முகில்கள்

(ஈ) தேன்கூடு

(iii) கருவிளம்

(அ) பணிகள்

(ஆ) மலரடி

(இ) மாவிலை

(ஈ) பூவிதழ்

(iv) தற்குறிப்பேற்றணி

(அ) அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை

(ஆ) போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துக் கை காட்ட.

(இ) சினத்தைப் பொருளென்று கொண்டவன்
கேடு நிலத்தறைந்தான் கைபிழைமா தற்று.

(ஈ) காக்கப் பொருளா அடக்கத்தை ஆக்கம்
அன்ன நீரார்க்கே உள.

(v) புகழ்வது போலப்பழித்தல் (வஞ்சப்புகழ்ச்சியணி) அணி.

(அ) அஞ்சியேன் என்றவன் தன்ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்பதனால் வாய்நோர்ந்தேன்

(ஆ) தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுகலான்.

(இ) ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழுங் கலை சையே.

(ஈ) ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் ஊடயான் உழை.

**8.** நிரப்புக (எவையேனும் **மூன்றுமட்டும்**) *3*

(i) அகவல் ஓசை பெற்று வருவது ______ ஆகும்.

(அ) குறள் வெண்பா

(ஆ) கலிப்பா

(இ) நேரிசை வெண்பா

(ஈ) ஆசிரியப்பா

(ii) செய்யுளில் ஒரே சொல் பிரிபடாமல் நின்று பலபொருள் தருவது ______ யாகும்.

(அ) வஞ்சப்புகழ்ச்சி

(ஆ) பிரிமொழிச் சிலேடை

(இ) பின்வருநிலை

(ஈ) தற்குறிப்பேற்ற அணி

(iii) காய்முன் நிரை வருவது ______ தளையாம்.

(அ) இயற்சீர் வெண்டளை

(ஆ) நிரையொன்றாசிரியத்தளை

(இ) வஞ்சித்தளை

(ஈ) கலித்தளை

(iv) வெண்பா ______ வகைப்படும்.

(அ) மூன்று

(ஆ) நான்கு

(இ) ஆறு

(ஈ) ஐந்து

(v) கண்ணதாசன் என்ற சொல்லுக்கு அலகிட்டு வாய்பாடு கூறு.

(அ) நேர் நிரை நேர் கூவிளங்காய்

(ஆ) நிரை நேர் நிரை புளிமாங்கனி

(இ) நிரை நிரை நேர் கருவிளங்காய்

(ஈ) நேர் நேர் நேர் - தேமாங்காய்

. கூறியவாறு செய்க. (**மூன்றுமட்டும்**)

i கண் (ஈரசைச்சீராக்குக)

(அ) கண்கள்

(ஆ) கணி

(இ) காண்

(ஈ) காணாமல்

ii) உதவிக்கு (அலகிட்டு வாய்பாடு கூறு)

(அ) புளிமாங்கனி

(ஆ) தேமாங்காய்

(இ) புளிமாங்காய்

(ஈ) கூ விளங்காய்

(iii) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

இக்குறளின் ஈற்றுச்சீர் முடியும் வாய்பாட்டை அலகிடுக.

(அ) நாள்

(ஆ) பிறப்பு

(இ) காசு

(ஈ) மலர்

(iv) அச்சுதா அமரரேறே (அலகிட்டுத் தளை கூறு)

(அ) இயற் சீர் வெண்டளை

(ஆ) களத்தளை

(இ) நிரையொன்றாசிரியத்தளை

(ஈ) வஞ்சித்தளை

(v) காண்பரோ (அலகிட்டு வாய்பாடு கூறுக)

(அ) தேமா

(ஆ) கூவிளம்

(இ) புளிமா

(ஈ) கருவிளம்

**10.** இலக்கணக்குறிப்புத் தருக. (**மூன்றுமட்டும்**)

(i) பகலவன்

(அ) புளிமா

(ஆ) கூவிளம்

(இ) கருவிளம்

(ஈ) தேமா

(ii) கண்டிலேன்

(அ) மூவசைச்சீர்

(ஆ) ஈரசைச்சீர்

(இ) ஓரசைச்சீர்

(ஈ) நாலசைச்சீர்

(iii) தாமுள் வாக்கலும்

(அ) மாமுன் நேர்

(ஆ) விளமுன் நேர்

(இ) காய்முன் நேர்

(ஈ) கனிமுன் நேர்

(iv) இயற்சீர் வெண்சீர் மட்டுமே வருவது

(அ) வெண்பா

(ஆ) ஆசிரியப்பா

(இ) வஞ்சிப்பா

(ஈ) கலிப்பா

(v) விழா

**11.** சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க (**மூன்றுமட்டும்**) *3*

(i) (அ) செய்யுளின் சொல்லழகு, பொருளழகு பற்றிக் கூறுவது எழுத்திலக்கணம்

(ஆ) செய்யுளின் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது அணியிலக்கணம்

(இ) செய்யுளின் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது யாப்பிலக்கணம்

(ஈ) செய்யுளின் சொல்லழகு பொருளழகு பற்றிக் கூறுவது பொருளிலக்கணம்

(ii) (அ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது இன்னிசைவெண்பா

(ஆ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது வஞ்சிப்பா

(இ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது குறள் வெண்பா

(ஈ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது கலிப்பா

(iii) (அ) காய்முன் நேர் வருவது வெண்சீற் வெண்டளை

(ஆ) காய்முன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை

(இ) காய்முன் நேர் வருவது கவித்தளை

(ஈ) காய்முன் நேர் வருவது இயற்சீர் வெண்டளை

(iv) (அ) யாப்பின் உறுப்புக்கள் ஆறு ஆகும்

(ஆ) யாப்பின் உறுப்புக்கள் மூன்றாகும்

(இ) யாப்பின் உறுப்புக்கள் பலவாகும்

(ஈ) யாப்பின் உறுப்புக்கள் ஐந்தாகும்

**13.** கீழ்வரும் பத்தியைப்படிக்கவும். தொடர்ந்து கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்குரிய விடையை எடுத்து எழுதவும் : *5*

சேகுமுதலியார் உமறுஎனும் திருநாமம் கொண்ட அருமை மகனைக் கடிகைமுத்துப் பிள்ளையிடம் தமிழ் கற்கும்படி ஏற்பாடு செய்தார். அடக்கம், ஒழுக்கம், பரிவு, ஆர்வம் ஆகிய நற்பண்புகளுடைய உமறு கற்பன கற்றுக் காளைப் பருவம் எய்தினார். அக்காலை வாலைவாரிதி என்ற புலவன் வடக்கிருந்து இங்கு வந்தான். அவன் வடமொழி தென்மொழி மந்திரம் தந்திரம் தெரிந்த மாயாவி. பல பகுதிக்கும் சென்று வாதிட்டு வென்ற அவன் எட்டயபுரம் வந்து அரசவைப் புலவருடன் வாதிட விரும்பி அரசரின் இசைவினைப் பெற்றான்.

(i) பிள்ளையிடம் உமறு அனுப்பப் பட்டதேன் ?

(அ) தமிழ் கற்க

(ஆ) மந்திரம் கற்க

(இ) இசை கற்க

(ஈ) வீரக்கலைகள் கற்க

(ii) வாலைவாரிதி எங்கிருந்து வந்தவன் ?

(அ) கீழைநாட்டிலிருந்து

(ஆ) மேற்குத்திசையிலிருந்து

(இ) வடக்கிலிருந்து

(ஈ) இலங்கையில் இருந்து

(iii) வாலை வாரிதி அறிந்த கலைகள் எவை ?

(அ) மந்திரம் தந்திரம்

(ஆ) வடமொழி தென்மொழி

(இ) விவாதம்

(ஈ) இலக்கண இலக்கியம்

(iv) வாலைவாரிதி யாருடன் வாதிட விரும்பினான் ?

(அ) மன்னருடன்

(ஆ) அரசவைப் புலவருடன்

(இ) மக்களுடன்

(ஈ) அமைச்சர்களுடன்

(v) உமறு பெற்ற நற்பண்புகள் எவை ?

(அ) மன்னரை மதித்தல்

(ஆ) தாய்தந்தையை மதித்தல்

(இ) தமிழ்மொழியை மதித்தல்

(ஈ) அடக்கம், ஒழுக்கம், பரிவு, ஆர்வம்

**14.** பின்வரும் பாடற்பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு உரிய விடையை எழுதுக. *4*

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலைஅம்மே
எல்லுலவும் விந்தை மலை எந்தைமலை அம்மே
இமயமலை என்றுடைய தமையன் மலைஅம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
தோழிமலை நச்சினாட்டு வேள்விமலை யம்மே
செல்லினங்கள் முழவு கொட்ட மயிலினங்கள் ஆடும்
திரிகூட மலை எங்கள் செல்வமலை அம்மே

(i) விந்தை மலை எப்படிப்பட்டது ?

(அ) சொல்லரியது

(ஆ) மயிலினம் ஆடுவது

(இ) எல்லுலவுவது

(ஈ) செல்வமிக்கது

(ii) செல்லி என்பது எந்த மலைக்குரியவரைக் குறிப்பது ?

(அ) இமயமலைக்குரியவர்

(ஆ) சாமிமலைக்குரியவர்

(இ) பழநிமலை

(ஈ) கொல்லிமலை

(iii) வெள்ளிமலை எந்நாட்டிற்குரியது ?

(அ) சேரநாடு

(ஆ) சோழநாடு

(இ) வடநாடு

(ஈ) நாஞ்சிலநாடு

(iv) திரிகூடமலை எப்படித் திகழும் ?

(அ) வளமுடன் திகழும்

(ஆ) செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்

(இ) சொல்லரியதாகத் திகழும்

(ஈ) காணி மலையாகத் திகழும்

**15.** ஏதேனும் **ஒரு** வினாவிற்குமட்டும் விடைதருக : *5*

(அ) கபிலர் கண்ட உண்மையே கலிலியோ கண்டது என்பதை விவரி.

(ஆ) சீதக்காதி வள்ளலின் சிந்தையில் தோன்றிய பணி யாது ? காரணம் என்ன ? நிறைவேறக் காலங்கடந்தது ஏன் ?

(இ) பெரியாரை நெ.து.சு. அவர்கள் இமயம், அதில் சுரக்கும் ஆறுகளோடு ஒப்பிட்டதை விவரி.

**16.** ஏதேனும் **ஒன்றனுக்கு** விளக்க வி[illegible] 5

[illegible]

2

(அ) உமறுப்புலவரின் நன்றி மறவா[illegible]னை எழுதுக.

(ஆ) கதர் இயக்கத்தில் பெரியாருக்[illegible]ற்றினை எழுதுக.

**18.** விளக்கமான விடைதருக. (**ஒன்றுக்**[illegible]) *6*

(அ) ரகு வேலை தேடி அலைந்த அனுபவங்களை ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் எவ்வாறு விளக்குகிறார் ? விவரி.

(ஆ) 'மண்ணாசை' என்ற தலைப்பைப் பட்டாளத்தாரின் வாழ்க்கை மூலம் சோலை சுந்தர பெருமாள் விளக்கும் தன்மையை விளக்கி எழுதுக.

**19.** சுருக்கமான விடைதருக. (**ஒன்றுக்கு** மட்டும்) *3*

(அ) பங்கஜம் உயிர்களிடத்தில் அன்புகொண்டவள் என்பதை எவ்வாறு உணரலாம் ?

(ஆ) 'தண்டச்சோறு' என்ற சொல் ரகுவின் வாழ்வை மாற்றியது எப்படி ?